DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். ரமேஷ்பாபு | Caste: | |
| Father's Name: | துரை பாண்டியன் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 55 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 25.10.2025

( 1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. LADC Counsel present.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது பனைக்குளம் அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2024ம் தேதி நான் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பொறுப்பு முதன்மை மருத்துவ அலுவலராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் இரவு சுமார் 10.00 மணியளவில் இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரை சேர்ந்த முனியசாமி மகன் சிவா, வயது சுமார் 23 என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் தனக்கு தெரிந்த நபர்களால் தனது வீட்டில் வைத்து கையாலும் கத்தியாலும் தாக்கியதில் மூக்கு, முதுகு பகுதிகளில் காயங்கள் இருந்தன. அதன்பிறகு அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் மேற்படி சிவாவுக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என சான்று வழங்கியதால்

அதனடிப்படையில் நான் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என சான்று வழங்கினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.3**. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து வழங்கிய சான்று **அ.சா.ஆ.4**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

மேற்படி சிவா இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்தால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் இல்லை. காரணம் முதுகிலும், மூக்கிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதால் வாய்ப்பு இல்லை. சிகிச்சைக்கு வருவதற்கு முன்பாக மேற்படி சிவா சம்பவம் குறித்து போலிசாருக்கு தகவல் தெரிவித்துவிட்டு வந்ததாக சொன்னார் என்றால் சரியல்ல. நான்தான் போலிசுக்கு தகவல் தெரிவித்தேன். போலிசாருக்கு தகவல் தெரிவித்த நேரத்தை விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் விபத்து பதிவேட்டு அறிக்கை தயார் செய்யும்போதே போலிசுக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். காயம்பட்ட நபர் கூறியதன் அடிப்படையில்தான் கத்தியால் அவர் தாக்கப்பட்டுள்ளதாக விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சிவா மருத்துவமனைக்கு வரவில்லை என்றும் நான் அவருக்கு சிகிச்சை வழங்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம்அ ளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

மேல்சிகிச்சை வழங்கிய மருத்துவர் கொடுத்த கருத்துரையில் சிவாவுக்கு உடலின் எந்த பகுதியில் காயம் இருந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சிவாவுக்கு ஏற்பட்ட

காயத்தின் நீளம், அகலம், ஆழம் குறித்தும் மருத்துவ கருத்துரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் எந்த ஆயுதத்தால் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தேதியில் டிஎஸ்பி விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது சிவாவுக்கு உடம்பின் எந்த பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த ஆயுதத்தால் சிவாவுக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சிவாவுக்கு ஏற்பட்ட காயங்களின் நீளம், அகலம், ஆழம் குறித்து டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான். சிவாவுக்கு மூக்கிலும், முதுகிலும் ஏற்பட்ட காயம் கரடுமுரடான சாலையில் விழ நேர்ந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் உருண்டு விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு. காயம்பட்ட சிவா இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை சிகிச்சையில் இருந்தார் என்றால் சிகிச்சைக்கு சேர்ந்தவுடனே முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜ்குமார் | Caste: | |
| Father's Name: | பாலசுப்பிரமணியன் | Calling: | சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 34 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 25.10.2025

( 1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. LADC Counsel present.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2024ம் தேதி இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது இரவு 10.30 மணியளவில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரை சேர்ந்த சிவா என்பவர் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கிடைத்த தகவலை பெற்று இராமேஸ்வரம் நகர் காவல்நிலைய த.கா. 1820 திரு பாலகிருஷ்ணன் என்பவரை இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்துவரும்படி அனுப்பி வைத்தேன். த.கா பாலகிருஷ்ணன் அரசு மருத்துவ கல்லூரி

மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று 03.04.2024ம் தேதி காலை 5.00 மணியளவில் நிலையம் வந்து என்னிடம் ஒப்படைத்ததை நான் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண் 73/2024 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC and sec 3(2)(va) of SC/ST (POA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5**. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை இந்நீதிமன்றத்திற்கும் ஒரு நகலை காவல் கண்காணிப்பாளருக்கும் மற்ற நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

சம்பவம் நடந்த இடத்திலிருந்து இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்திற்கு 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். அதேபோல் காவல்நிலையத்திலிருந்து இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு தாமதம் எங்களுடைய காலதாமதம் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தவுடன் உடனே சென்றிருந்தால் எனக்கு உண்மையான தகவல் கிடைத்திருக்கும் என்றால் நான் தலைமை காவலரை உடனே அனுப்பி வைத்தேன். அவர் அங்கு சென்றபோது மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அன்றைய தினமே தலைமை காவலர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டாரா என்றால் சென்றுவிட்டார். முதல் தகவல் அறிக்கையில் தலைமை காவலர் புகார் வாக்குமூலம் பெற்று வந்த நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நல்ல நிலையில்தான் இருந்தார் என்றும் அவர் சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பாகவே காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்துவிட்டுதான் சென்றார் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் வாகன விபத்தினால் ஏற்பட்டது என்றும் ஏற்கனவே எதிரிகளுக்கும் அவருக்கும் இருந்த முன்பகையை மனதில் வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

புகாரில் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் பிரியங்கா, தமிழரசி, வேலம்மாள் ஆகியோர்கள் வந்துவிலக்கிவிட்டதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். இராமேஸ்வரம் மருத்துவமனையில் காயம்பட்ட சிவா மயக்கநிலையில் இருந்தாரா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்த நபரின் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் தலைமை காவலர் பாலகிருஷ்ணன் காயம்பட்ட சிவாவிடம் புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றும், இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு 108 ஆம்புலன்ஸில் சிவா வரும்போது எழுதாத வெள்ளை பேப்பரில் சிவாவிடம் கையொப்பம் பெற்றுவிட்டு வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக எந்த தேதியில்

எத்தனை மணிக்கு டிஎஸ்பி வசம் ஒப்படைத்தேன் என்றால் 5.30 மணிக்கு ஒப்படைத்தேன்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)